புதுமலர்: 19 இதழ்: 02 பங்குனி – சித்திரை

# அனல்

01.03.2022

ஆசிரியர்: போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே **அனலாயிருங்கள்:**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## தே
## வனால் சாட்சி வாழ்வு!
## வனுக்கான ஆராதனை!
## வனுடைய இருதயத்தைப் புரிதல்!



சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. குறுக்கெழுத்துப்போட்டி - 106
05. வாலிபர் வளாகம்
06. வினா விடை - 108
07. பெண்கள் பக்கம்
08. சிறுவர் வட்டம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. தவறான உபயோகம்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்!

இவ் வருடத்தின் இரண்டாவது சஞ்சிகையூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருப்பீர்களென நம்புகின்றோம். 'கர்த்தர் ஒரு போதும் உங்களைக் கைவிடமாட்டார்' இந் நாட்களில் முழு உலகமும் தேவனுடைய வருகைக்குரிய அடையாளங்களை கண்டு கொண்டிருக்கிறது.

கொள்ளை நோய்களும், இயற்கை அழிவுகளும், ராஜ்யங்களுக்கு விரோதமாக ராஜ்யங்களின் யுத்தங்களும், விசுவாசக் குறைவுகளும், அன்பு தணிந்து போதலும் எங்கும் பெருகியிருக்கிறது.

எனவே தேவ பிள்ளைகளாக தேவனுடைய வருகைக்காக நாம் ஆயத்தப்பட வேண்டும். தேவனை அறியாதவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷத்தைச் சொல்லுவோம்.

கர்த்தருக்குள் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தேவனுடைய உறவில் நிலைத்திருங்கள்.


தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதையும் கற்றதும்



# கெட்டுப்போகாதே!...

❑ வை. விமலதாஸ்

தேவபக்தியுள்ள தந்தை ஒருவர் சிறு பிள்ளைகளுக்கு ஞானமாக கற்றுக் கொடுப்பதில் தேர்ந்தவர். அதே போன்று தன் பிள்ளைகளையும் நல்லவிதமாக வளர்த்து வந்தார். அவர்கள் ஒழுக்கமற்றவர்களோடு பழகுவதையும் சில தேவையற்ற விடயங்களில் பிள்ளைகள் ஈடுபடுவதையும் அவர் ஒரு போதும் அனுமதிக்கமாட்டார், அதில் மிகவும் கண்டிப்புள்ளவராக இருந்தார்.

ஒருமுறை அவரது பிள்ளைகள் அந்த ஊரில் நடைபெறவிருந்த விருந்து ஒன்றில் கலந்து கொள்ள தந்தையிடம் அனுமதி கேட்டனர்.

அவரோ அந்த விருந்தைக் குறித்து விசாரித்துப்பார்த்தார். அங்கு சில நற்செயல்களற்றவை நடக்கும், கெட்ட பழக்கம் உள்ளவர்களும் அதில் கலந்து கொள்வார்கள் என்று அறிந்திருந்தபடியால் தன்னுடைய பிள்ளைகளுக்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்.

இதனால் ஏமாற்றமடைந்த அவரது மகன் தகப்பனைப் பார்த்து, 'அப்பா, நீங்கள் நினைப்பது போல ஆபத்தில் சிக்குவதற்கு நாங்கள் ஒன்றும் சிறு குழந்தைகள் அல்ல, எமக்கும் இப்போது நன்மை, தீமை எது என்று தெரியும்' என்று கோபத்தோடு கூறினான்.

தந்தையோ மகனுக்கு பதிலாக எந்த வார்த்தையும் பேசாமல், வீட்டிலிருந்த ஒரு எரிந்த கரித்துண்டை எடுத்தார். அதை தன் மகனிடம் கொடுத்தார். மகன் கரித்துண்டை கையில் வாங்கின மாத்திரத்தில் அவனுடைய கையெல்லாம் கறைபட்டது. கைதவறிய கரித்துண்டு அவனது வெள்ளை சட்டையிலும் விழுந்து கறைபடுத்தியது. இதனை எதிர்பார்க்காத மகன், 'கரித்துண்டை கவனத்துடன் கையாள்வது மிகவும் கடினம் தான்' என்று கூறினான்.

அதைக் கேட்ட தகப்பன், 'மகனே கரித்துண்டு உன்னை சுட்டுவிடவில்லை, ஆனால் உன்னை கறைபடுத்திவிட்டது என்பதை புரிந்து கொண்டாயா' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவர்களோடு பழகுவதால் நாம் உடனே தீயவர்களாக மாறுவதில்லை. ஆனால் அவை நம்மை கறைபட்டவர்களாக மாற்றி, காலப்போக்கில் நம்மையும் அத்தீய குணத்திற்கு சொந்தக்காரராக மாற்றிவிடும்.

உதாரணமாக பண ஆசை உள்ளவர்களிடம் பழகிப்பார்த்தால், அவர்கள் அதைச் சேர்க்க வேண்டும், இதைக் கட்ட வேண்டும், அதை வாங்க வேண்டும் என்றே பேசுவார்கள். அதைக் கேட்டுக் கொண்டிருந்தால் நமக்கும், ஐயோ நாம் ஒன்றும் சேர்த்து வைக்கவில்லையே, இனியாவது சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் நம்மையும் அறியாமல் நமக்குள் வந்துவிடும்.

பின், சிலவேளைகளில் எப்படியாவது நாமும் பணத்தை சேர்த்து வைக்க வேண்டும் என்று நினைத்து, அதையே செய்து தேவன் பேரில் வைத்த நம்பிக்கையை விட்டு வீண் கவலைக்கும் பாரத்திற்கும் உள்ளாகிவிடுவோம்.

குறை சொல்பவர்களோடு பழகினால் நாமும் காலப்போக்கில் எல்லாவற்றிலும் குறை சொல்பவர்களாகவும், குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாகவும் மாறிவிடுவோம். எனவே மிகவும் கவனத்துடன் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

நாம் ஒருவரையும் வெறுக்கக்கூடாது, ஆனால் அவர்கள் யார், எப்படிப்பட்ட வர்கள் என்று அறிவதற்கு முன் நெருங்கிய நட்பு வைக்கக்கூடாது. அது ஆபத்தில் சென்று முடிந்துவிடும்.

**பிரசங்கி 10:1 செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 105, வினா விடை - 107

## சரியான விடை எழுதியவர்கள்

**கனடா**
01. குகன் குடும்பம் +

**அனலைதீவு**
02. எஸ்.டிலக்சனா

**ஊர்காவற்றுறை**
03. வி.சர்மிளா +
04. வி.நிதர்சனா +
05. சி.பசுபதி

**பாண்டவெட்டை**
06. எம்.ஜெசிந்தா
07. சி.சுமித்திரா
08. சி.சிவனேஸ்வரன்

**வடகாடு**
09. பா.ருஷாந்தன் *

**மானிப்பாய்**
10. வி.கல்பனா +

* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
× குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



**சரியான விடை எழுதியவர்களில் பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 107**
பா.ருஷாந்தன்
(வடகாடு)



**குறுக்கெழுத்துப் போட்டி - 105**
குகன் குடும்பம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பத்தில் துணை நிற்பவர்



❑ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பான அனல் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். மறுபடியும் நற்செய்திப்பகுதியூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். 'திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்' என்று தேவன் யோசுவாவுக்கு சொன்னது போலவே உங்களோடும் உங்கள் குடும்பத்தோடும் கர்த்தர் கூட இருந்து நடத்துவாராக. ஆமென்.

**சங்கீதம் 138:7a நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்.**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று சாட்சி பெற்ற தேவ மனுஷன் தாவீது சொல்கிறார்: 'நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்' என்பதாக. ஆம் தன் வாழ்க்கையின் அனுபவத்தையே தாவீது சொல்கிறார். சவுல் ராஜா இரண்டு தடவைகளுக்கு அதிகமாக கொலை செய்ய முயற்சிக்கப்பட்ட ஒவ்வொரு வேளைகளிலும் தேவன் அவனைப் பாதுகாத்தார். சொந்த பிள்ளைகளால் வந்த ஆபத்துக்கள் நடுவில் நின்றும் தேவன் தாவீதைக் காத்தார்.

ஆம் பிரியமானவர்களே, நீங்களும் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக நடந்து வாழ்ந்து பாருங்கள். உங்களுடைய துன்பங்களின் நடுவில் தேவனுடைய அதிசய செயல்களைக் காண்பீர்கள்.

யோசேப்பு என்ற தேவனுடைய மனுஷனுடைய வாழ்க்கையை கவனித்துப் பாருங்கள். தரிசனத்தைக் கொடுத்தவர் அதை நிறைவேற்றுவார் என்ற முழு நம்பிக்கையினாலே துன்பத்தின் நடுவினூடாக கடந்து சென்றார். சொந்த சகோதரர்கள் பகைத்தார்கள், கொலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய எத்தனித்தார்கள். 10பேர் ஒன்றாக சேர்ந்து ஒரு சகோதரனைப் பகைத்து ஒதுக்கினார்கள். அந்நிய தேசத்திற்கு அடிமையாக விற்றார்கள். அங்கே பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் சிறை வாழ்க்கை இப்படி துன்பத்திற்கு மேல் துன்பம். ஆனாலும் தரிசனத்தை தந்தவர் நிறை வேற்றுவார் என்ற நிச்சயத்தினாலேயே எல்லாவற்றையும் தாங்கியவனாய் பரிசுத்தமாகவும் தன்னைக் காத்துக் கொண்டு பொறுமையோடிருந்தான். **வேளை வந்தது வேந்தன் உயிர்ப்பித்தார். யோசேப்பினுடைய எல்லா வேதனையும் நீங்கியது.**

ஆம் எனக்கு அன்பானவர்களே, ஒருவேளை தேவன் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக நீங்களும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு, துன்பங்களுக்கு, பலவிதமான பழிச்சொற்களுக்கு, தரக்குறைவாக பார்க்கப்படும் நிலைகளுக்கு முகங் கொடுத்தவர்களாக இருக்கலாம். பயப் படாதீர்கள்! சொப்பனத்தை (தரிசனத்தை) தந்த ஆண்டவர் அதை நிறைவேற்ற வேண்டிய கிருபையையும் உங்களுக்கு தந்து நடத்துவார். எல்லா துன்பங்களின் நடுவிலிருந்தும் உங்களை உயிர்ப்பிப்பார். மேன்மைப்படுத்துவார். யாரும் எதிர் பார்க்காத நிலைக்கு உங்களை மேன்மைப் படுத்துவார். நீங்கள்கூட யோசித்திருக்க முடியாத அல்லது எதிர்பார்த்திருக்காத இடத்திற்கு தேவன் உங்களை உயர்த்தி மகிமைப்படுத்துவார்.

மோசேயின் வாழ்க்கையில் பார்த்தால் தன் சொந்த ஜனங்களுக்காக துன்பத்தை அனுபவிப்பதை பார்க்கலாம்.

**எபிரெயர் 11:24-26 (24.) விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, 25. அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு, 26. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்.**

ஆம் பிரியமானவர்களே மோசே தன் சொந்த ஜனங்களுக்காக, உறவுகளுக்காக துன்பத்தை அனுபவிக்க தன்னை மனப்பூர்வமாக ஒப்புக் கொடுத்ததைப் பார்க்கிறோம். ஓர் அருமையான சுகபோகமான வாழ்க்கையை எகிப்தின் இளவரசனாக இருந்து கொண்டு வாழ்ந்திருக்கலாம். நல்ல அறிவு, நல்ல அழகு, நல்ல தேக ஆரோக்கியம், நல்ல பேச்சுத்திறன், நல்ல வசதி இப்படி எல்லாம் தரமானதாக இருந்த வாழ்க்கையை உறவுகளுக்காக தியாகம் செய்து துன்பத்தின் பாதைக்கூடாக நடக்க எண்ணினான்.

ஒருவேளை நீங்களும் உங்களுடைய உறவுகளின் நன்மைக்காக பலதரப்பட்ட வேதனைகளை, கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். மற்றவர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையில் துயரங்கள், கஷ்டங்களை அனுபவித்து உங்கள் சுகமான வாழ்க்கையை இழந்து போயிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவேளை உங்களிடம் இருந்து நன்மையை பெற்ற உறவுகள் உங்களை தூக்கி எறிந்து மதிக்காமலும் கூட நடந்து கொண்டிருக்கலாம். கவலைப்படாதீர்கள். மோசேயை பார்வோனுக்கும், எகிப்தின் அதிகாரிகளுக்கும், இஸ்ரவேல் ஜனங்களுடைய கண்களுக்கும் முன்பாக மேன்மைப் படுத்தி அதிசயங்களை மோசேயின் கரத்தின் மூலமாக செய்து மகிமைப்பட்ட ஆண்டவர் உங்களையும் எல்லார் முன்பாகவும் மகிமைப்படுத்தி கனப் படுத்துவார்.

சவுலின் மூத்த குமாரனாகிய யோனத்தான் தன் சிநேகிதனுக்காக துன்பத்திற்கூடாக கடந்து செல்வதைப் பார்க்கிறோம். சவுலாகிய தன் தகப்பனுடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து தாவீதைக் கொலை செய்துவிட்டால் எல்லா பிரச்சினைகளும் முடிந்துவிடும். அரசாட்சி கையில் ஸ்திரமடையும். தகப்பனோடும் நல்ல உறவிருக்கும். ஆனாலும் பாருங்கள், தன் சிநேகிதனுக்காக துன்பத்தை ஏற்று எல்லா துன்பத்தையும், தகப்பனாலே அவமானமான வார்த்தையையும் கேட்டு,

**1சாமுவேல் 20:30 அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி, அவனைப் பார்த்து: இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்து கொண்டிருக்கிறதை நான் அறியேனோ?**

என்று சொல்லி, யோனத்தானை அரச சபையில் எல்லா பெரியோருக்கும் முன்பதாக கேவலமாக பேசுகின்றான். இவை எல்லாவற்றையும் தன் உயிர்த் தோழனுக்காக தாங்கி இறுதியில் யுத்தத்தில் தன் உயிரையும் கொடுக்கிறான். நீங்களும் ஒருவேளை உங்கள் சிநேகிதர் நிமித்தம் துன்பத்தின் நடுவில் நடந்து கொண்டிருக்கலாம். மரித்தும் இன்னும் பேசிக்கொண்டிருக்கும் உத்தம தோழனாகிய யோனத்தானைப் போல உங்கள் வாழ்க்கையின் முடிவிலும் உங்கள் வாழ்க்கைகள் பேசிக்கொண்டிருக்கும் வாழ்க்கையாக தேவன் மாற்றுவார்.

பரிசுத்தத்தை காப்பதற்காக யோபு துன்பத்தின் நடுவினூடாக கடந்து சென்றார். ஆம் பிரியமானவர்களே நீங்களும் கர்த்தருக்காக வாழ்கிறதின் நிமித்தம் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவிக்கலாம். மற்றவர்களால் ஒதுக்கப்படலாம், குறைவையும், வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனாலும் உங்கள் பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டவர்களாய் கர்த்தர் மேல் நம்பிக்கையாக இருங்கள். தாவீது சொன்னது போல தேவன் உங்களை துன்பத்தின் நடுவிலிருந்து உயிர்ப்பித்து உங்களுக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பார். தேவ நாமம் உங்கள் மூலமாக மகிமைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 01 | | 02 | | | | |
| | | | 04 | | | | 03 | |
| 05 | | | | | | | | |
| | | | | 07 | 06 | | | |
| | 08 | | | | | | | |
| 10 | | | | | 09 | | | |
| | | | | | 11 | 12 | | |
| 14 | | | | | | | | 13 |
| 15 | | | | | | | | 16 |

# குறுக்கெழுத்துப் போட்டி 106

**இடமிருந்து வலமாக**

01. யோசபாத்தும் அகசியாவும் தர்ஷீசுக்கு செல்வதற்கு இங்கே கப்பலைச் செய்தார்கள்
05. உம்ரியின் குமாரனாகிய இவன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்
08. 'இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை' எனக் கூறியவன்
10. சீமேயியை பட்டயத்தினால் கொன்றுபோடுவதில்லையென்று ஆணையிட்டிருந்தவன்
14. பன்னிரண்டு அப்போஸ்தலரில் ஒருவன்
15. எஸ்தரின் அப்பா

**வலமிருந்து இடமாக**

01. யெகூவின் பட்டயத்திற்கு தப்பினவனை இவன் கொன்றுபோடுவான்
04. 'நீதிமானுடைய வாய் .......... வெளிப்படுத்தும்'
07. தாவீதின் குமாரத்தி
11. இவன் யெதிதியா எனவும் அழைக்கப்பட்டான்
16. கர்த்தருடைய கோபம் மூண்டு அக்கினி இஸ்ரவேலருக்குள்ளே பற்றியெரிந்ததினால் அவ்விடத்துக்கு இவ்வாறு பேரிடப்பட்டது

**மேலிருந்து கீழாக**

02. இவன் ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது
03. ஆர் பட்டணத்தில் குடியிருந்தவர்கள்
09. அகித்தோப்பேலின் ஆலோசனையைவிட இவன் ஆலோசனை இஸ்ரவேலருக்கு நலமாய் இருந்தது

**கீழிருந்து மேலாக**

06. வார்த்தைகளை கேட்கமுடியாமல் இவன் ஆத்துமா சாகத்தக்கதாய் விசனப்பட்டது
12. 'கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற ............ மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி'
13. எருசலேம் தேவாலயத்திலிருந்து பொன், வெள்ளிப் பணிமுட்டுக்களை எடுத்து பாபிலோன் கோவிலில் வைத்தவன்
15. ஈசாயின் குமாரரில் ஒருவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிம்சோன்
# Samson

☐ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அனல் சஞ்சிகை வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் நல்ல சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். தொடர்ந்தும் தேவாதி தேவன் உங்களை ஆசீர்வதித்து பாதுகாப்பாராக.

இன்றைய நாட்களில் எவ்வளவு தான் உலகம் நவீனத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கான சரியான ஆதரவு அற்றவனாகவே வாழ்ந்து வருகின்றான். பணம் இருக்கிறது, பொருள் இருக்கிறது, படிப்பு இருக்கிறது, மரியாதை இருக்கிறது; ஆனால் ஒரு மனிதனிற்கு இவையெல்லாம் இருந்தும் கூட சரியான ஆதரவு அவனுக்கு கிடைக்கவில்லையென்றால் மேற்கூறிய யாவும் அவனுக்கு பயனற்றதாகிப் போய்விடும். பரிசுத்த வேதாகமம் சொல்வதைக் கவனியுங்கள்.

**ஏசாயா 31:5 பறந்து காக்கிற பட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத்தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார்.**

தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு எப்பொழுதும் ஆதரவாகவே இருக்கிறார். மனிதர்கள் உங்களுக்கு சரியான ஆதரவை தராதுவிட்டாலும் நீங்கள் சோர்ந்து போய்விடவேண்டாம். 'தேவாதி தேவன் உங்களுக்கு ஆதரவாக இருக்கிறார்'. அவர் ஆதரவாக இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல் நம்மைக் காப்பாற்றி எல்லாத் தீமைகளிலிருந்தும் நம்மை விடுவிக்கிற தெய்வமாக இருக்கிறார். சாத்தானின் சேனைகள் உங்களுக்கு விரோதமாக எழும்பி வந்தாலும் தேவன் உங்களுக்கு ஆதரவாக இருப்பதினால் கலங்காதிருங்கள்.

எப்படி தேவன் எம்மேல் ஆதரவாக இருக்கிறார் என்று பார்ப்போமானால், 'பறந்து காக்கிற பட்சிகளைப் போல' ஆம் தேவாதி தேவன் தம்மை ஒரு பறவையாக உருவகம் செய்யும் அளவிற்கு உங்களை நேசிக்கிறார், உங்களுக்கு ஆதரவாக இருக்கிறார். தாய்ப்பறவையானது தன் குஞ்சுகளை தனது சிறகுகளின் கீழ் அணைத்து பாதுகாப்பது போல் கர்த்தர் நம்மையும் பாதுகாப்பார், நமக்கு ஆதரவாக இருப்பார்.

**எனவே சோர்ந்து போகவேண்டாம்; மனம் தளர்ந்துவிடவேண்டாம். யார் உங்களை ஆதரிக்காதுவிட்டாலும் உங்களுக்காக சிலுவையில் தன் ஜீவனையே கொடுத்த அன்பின் பரமபிதா உங்களுக்கு ஆதரவாக இருப்பார்.**

தொடர்ந்தும் இவ் இதழிற்கான வாலிபர் வளாக தொடர் வேதபாடத்திற்குள் நுழைவோம், வாருங்கள்.

சிம்சோன் என்கிற மனிதனின் தோல்விகள் அல்லது பெலவீனங்களைக் குறித்து இப் பகுதிகளில் தொடர்ந்து தியானித்து வருகின்றோம். அந்த வகையில் அவருடைய முதலாவது தோல்வியாக அல்லது பெலவீனமாக அமைந்தது அவரது 'பெண்ணாசையின் மயக்கம் நிறைந்த வாழ்க்கை' எனப்பார்த்தோம்.

## 02. திடீரென முன்னேற வேண்டும்: இலகுவாக சம்பாதிக்க வேண்டும்

இரண்டாவதாக 'திடீரென முன்னேற வேண்டும்; இலகுவாக சம்பாதிக்க வேண்டும்' என்ற அவரது ஆசைகள் குறித்த ஓர் முன்னோட்டத்தை கடந்த இதழில் உங்களுக்கு விளங்கப்படுத்தியிருந்தேன்.

இவ் இதழிலும் சிம்சோன் எங்கே இலகுவாக சம்பாதிக்க ஆசைப்பட்டார்? என்பதற்கான விளக்கங்களை தரவிரும்புகின்றேன். தயவு செய்து இக் கருத்துக்களை ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் மட்டும் கவனிக்கும்படி தயவுடன் வேண்டுகின்றேன்.

விடுகதைகள் அல்லது சவால்விடுவதின் மூலமாக பொருட்களை சம்பாதிக்க சிம்சோன் முற்பட்டார்.

**நியாயாதிபதிகள் 14:11-13 (11.) அவர்கள் அவனைக் கண்டபோது, அவனோடேகூட இருக்கும்படி முப்பது தோழரை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள். 12. சிம்சோன் அவர்களை நோக்கி: ஒரு விடுகதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்; அதை நீங்கள் விருந்துண்கிற ஏழுநாளைக்குள்ளே கண்டுபிடித்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எனக்கு விடுவித்தால், நான் உங்களுக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுப்பேன். 13. அதை எனக்கு விடுவிக்காதேபோனால், நீங்கள் எனக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: உன் விடுகதையைச் சொல்லு, நாங்கள் அதைக் கேட்கட்டும் என்றார்கள்.**

விடுகதை ஒன்றின் மூலம் பந்தயம் கட்டி அதன் மூலமாக மாற்று வஸ்திரங்களை பெற முயற்சித்தார். சிம்சோன் பந்தயத்தில் தோற்றால் அவர் தனது 30 நண்பர்களிற்கும் 30 மாற்று வஸ்திரங்களைக் கொடுக்க வேண்டும். இருப்பினும் அந்த 30 நாட்களிற்கும் அவர்களுக்கு ஒவ்வொன்றே கிடைக்கும். ஆனால் சிம்சோன் வெற்றியடைவாரானால் 30நண்பர்களும் சேர்ந்து ஒவ்வொன்று வீதம் தனி நபரான சிம்சோனுக்கு கொடுக்க வேண்டும். சிந்தித்துப் பாருங்கள், ஒரு பந்தயத்தில் ஒரு மனிதனுக்கு ஒரு நேரத்தில் 30 மாற்று வஸ்திரங்கள் கிடைக்கின்றது.

உடல் உழைப்பு ஏதுமின்றி வெறும் பந்தயம் ஒன்றின் மூலமாக 30 மாற்று வஸ்திரங்கள் கிடைக்கப்பெறும் வழியை சிம்சோன் கண்டுபிடித்தார்.

இதனை வாசிக்கின்ற நீங்கள் ஒருவேளை சொல்ல முடியும், உண்மையில் சிம்சோன் இதனை நீங்கள் கூறும் நோக்கத்திற்காக செய்யவில்லை. மாறாக திருமண சந்தோஷத்தில் பொழுது போக்காக அவரால் சொல்லப்பட்டிருக்கலாம் என்பதாகக் கூறலாம்.

ஆம், அப்படித்தான் இருப்பினும் நான் அதனை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இவ் விபரீதமான ஆசை எங்கே முடிந்தது என்பதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

**நியாயாதிபதிகள் 14:20 சிம்சோனின் பெண்சாதியோவென்றால், அவனுடைய தோழரில் அவனோடே சிநேகமாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப் பட்டாள்.**

இவ் விபரீத விளையாட்டினால் சிம்சோன் தன் மனைவியையே இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதைக் காண்கிறோம். தேவையில்லாத கொண்டாட்டம், தேவையில்லாத பொழுது போக்குகள், தேவையில்லாத பந்தயங்கள் அனைத்தும் சேர்ந்து அவரை அவரது துணையையே இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டதைக் காண்கிறோம்.

இன்றும் பலர் தொழில் என்ற வகையிலும்; நட்பு என்ற ரீதியிலும் தேவையில்லாத மனிதர்களை அழைத்து *Party* என்கிற பெயரில் பலவிதமான கேளிக்கை நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். முடிவு அவர்கள் தங்கள் குடும்பத்தையே இழந்து அல்லல்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையான வாலிபர்களே, நாங்கள் சம்பாதிக்க வேண்டும் என்பதை எங்கள் பெற்றோர் விரும்புகின்றனர். ஏன் பரிசுத்த வேதாகமமும் கூட நாம் வேலை செய்து பிரயாசப்பட வேண்டும் என புத்தி சொல்கின்றது.

**11தெசலோனிக்கேயர் 3:10-12 (10.) ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. 11. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். 12. இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்.**

பிரியமானவர்களே! ஒரு வேலையுமே செய்யாமல்; உதாரணமாக நீங்கள் இருக்கும் வீட்டில் சமைக்காமல், அந்த வீட்டை சுத்தம் செய்யாமல், மற்றவர்களின் உழைப்பை சாப்பிட்டு சோம்பலுள்ளவர்களாய், வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்று சுற்றித்திரிவது தவறு ஆகும்.

எனவே நாங்கள் வேலை செய்யத்தான் வேண்டும். அதற்காக சிம்சோனைப் போல் இலகுவாக சம்பாதிக்க வேண்டும் அல்லது உடனடியாக பெரிய வளர்ச்சியை அடையவேண்டும் என நினைத்து உடல் உழைப்பை வெறுத்து ஏமாற்று வழியில் பிழைத்து பொரும் சம்பாதிப்பதை தேவன் வெறுக்கிறார்.

**நெகேமியா 5:10-11 இந்த வட்டியை விட்டுவிடுவோமாக.**

**11. நீங்கள் இன்றைக்கு அவர்கள் நிலங்களையும், அவர்கள் திராட்சத்தோட்டங்களையும், அவர்கள் ஒலிவத்தோப்புகளையும், அவர்கள் வீடுகளையும், நீங்கள் பணத்திலும் தானியத்திலும் திராட்சரசத்திலும் எண்ணெயிலும் நூற்றுக்கொன்று வீதமாக அவர்களிடத்தில் தண்டிவருகிற வட்டியையும், அவர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள் என்றேன்.**

இப் பகுதி எதனைக் குறித்து பேசுகிறது? அக் காலத்தில் வாழ்ந்த ஜனங்களில் வசதியானவர்கள் வசதி குறைந்த மக்களுக்கு கடன் கொடுத்து அதற்கு வட்டியும் வாங்கி அவர்களின் சொத்துக்களையும் அவர்கள் பிள்ளைகளின் சுதந்தரத்தையும் அநியாயமான முறையில் அபகரித்து வந்தனர். தங்களுக்கு பணத்தின் மேல் பணத்தை சம்பாதித்தனர். ஆனால் அவை அனைத்தும் உழைப்பின்றி அநியாயமான முறையில் சம்பாதித்தனர்.

எனவே நெகேமியா மூலமாக தேவன் அவர்களுக்கு இந்த வட்டியை விட்டுவிடுவோமாக எனப் பேசினார்.

இவ் அனல் சஞ்சிகை வாலிபர் பகுதி மூலமாக தேவன் உங்களுடன் இடைபடுவதற்கு இடங்கொடுங்கள். **அநியாயமான வழியில் சம்பாதிப்பதை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறுத்துங்கள். வட்டிக்கு கொடுப்பதையும், வேண்டுவதையும் தேவன் வெறுக்கின்றார். அவைகளைச் செய்யாதிருங்கள். அத்தோடு பந்தயம் கட்டுதல், அதிஸ்டலாபச் சீட்டுக்கள் மூலம் சம்பாதித்தல் போன்றவற்றை நிறுத்துங்கள். நாங்கள் ஒரு நாளும் அதிஸ்டங்களை நம்பி வாழாமல் தேவனது மாறாத கிருபைகளை நம்பி வாழ்வோமாக.**

**நீதிமொழிகள் 20:21 ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த சுதந்திரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது.**

என்று வேதாகமம் சொல்கிறது. அதாவது துரிதமான அல்லது வேகமான வளர்ச்சி முடிவில் ஆசீர்வாதமாக இருக்காது. தேவன் உங்களை சரியான வழியில் ஆசீர்வதித்தால் சந்தோஷப்படுங்கள், அதனை அனுபவியுங்கள். மாறாக துரித வளர்ச்சிக்காக தேவன் காட்டிய வழிகளை விட்டுப்போகாதிருங்கள். ஏனெனில் அவை ஆரம்பத்தில் கைகூடி வருவதைப் போல் இருக்கும். முடிவிலோ நிலையாச் சொத்தாகப் போய்விடும்.

**நீதிமொழிகள் 28:20 உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங் களைப் பெறுவான்; ஐசுவரியவனாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான்.**

விரைவாகச் செல்வந்தனாக மாறுவதற்கு முனைகிறவன் அதன் நிமித்தமாக தவறான வழிகளை பின்பற்றுவதற்கு வாய்ப்புகள் அதிகம். முடிவில் அவனது தவறான வழிகள் நிமித்தம் இப் பூமியிலேயோ அல்லது மறுவாழ்விலேயோ அவன் தண்டனைகள் பெறுவது நிச்சயம் என வேதாகமம் சொல்கிறது.

**நீதிமொழிகள் 13:11 வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம்; கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ விருத்தியடைவான்.**

இவ் வசனத்திற்கான *International Bible Society Lanka* நிறுவனத்தினது இலகு தமிழ் மொழிபெயர்ப்பினை பார்ப்போம்.

***நீதிமொழிகள் 13:11 நேர்மையற்று சம்பாதித்த பணம் கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து போகும். ஆனால் சிறிது சிறிதாக உழைத்துச் சேகரிக்கிறவன் அதை அதிகரிக்கச் செய்கிறான்.***

வசனத்திற்கான விளக்கத்தை இலகு தமிழ் மொழி பெயர்ப்பின் மூலமாக நன்றாக விளங்கியிருப்பீர்கள் என நினைக்கிறேன்.

வஞ்சனையால் நேர்மையற்ற வழியில் செல்வத்தை மிகுதியாக சம்பாதிக்க முடியும். ஆனால் அதனால் மன வேதனைகளே பெருகும். நீண்ட நாட்கள் குடும்பத்திற்கு பயனுள்ளதாக அது அமையாது. அதனால் பலவிதமான உபத்திரவங்களும், வழக்குகளும், வியாதிகளும், நின்மதியற்ற சூழ்நிலைகளுமே ஏற்படும். தேவையில்லாமல் எதிரிகள் பெருகுவார்கள். சமாதானமற்ற நிலையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைய வேண்டி ஏற்படும். எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியில் தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டி வரும். மூன்றாம் நான்காம் தலைமுறை வரை சாபம் நீடிக்கக்கூடும். ஆனால் தனது கடின உழைப்பினால் கொஞ்சம் கொஞ்சமாக நியாயமான முறையில் சம்பாதிக்கிறவன் வேதனையின்றி சமாதானத்தோடே இருப்பான். அவன் செல்வம் விருத்தியடைவதோடு நிலைத்தும் நிற்கும். அவனது குடும்பம் கர்த்தரால் தழைத்தோங்கும்.

ஆம் அருமையானவர்களே! உங்களுடையதல்லாததை உங்களுக்காக சேர்த்துக் கொள்ள வேண்டாம். உங்களுடையதல்லாத ஏதேனும் உங்களிடம் இருந்தால் அதனை உரியவர்களிடம் கொடுத்து விடுங்கள். எக்காரணத்தைக் கொண்டும் அநியாயமான முறையில் பணம், பொருள், சொத்துக்களை கொள்வனவு செய்ய வேண்டாம். அப்படி பெற்றிருந்தால் அதனைத் திரும்பக் கொடுத்து விடுங்கள். ஏனெனில் இவ் உலகத்தின் நாட்கள் முடிவடைகிற தருணத்தில் நாம் வந்திருக்கிறோம். இயேசு ராஜாவின் வருகை மிக சமீபமாக நம்மை நெருங்கி நிற்கிறது.

**பணம் நம்மை ஆளுகை செய்யவிட்டுவிடாமல் பணத்தை நாம் ஆளுகை செய்வோம்.**

தேவன் இச் சஞ்சிகையின் செய்தியின் மூலம் உங்களை ஆசீர்வதித்திருந்தால் எங்களுடன் பகிர்ந்து கொள்ள மறக்க வேண்டாம்.

மறு இதழில் சந்திக்கும்வரை தேவ கிருபை உங்களோடு இருப்பதாக.

# வினா விடை - 108

01. பத்து வாலிபர் கர்மேலுக்குப் போனதெப்போது?

02. 'ஷி' என்று உச்சரிக்கத் தெரியாததால் கொல்லப்பட்ட ஜனங்கள் யார்?

03. சொப்பனம் கண்டு கலக்கமடைந்த இரு ராஜாக்கள் யார்? யார்?

04. ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசு விலையுள்ள புத்தகங்களை எல்லோருக்கும் முன்பாகச் சுட்டெரித்தவர்கள் யார்?

05. 'யெதிதியா' என்று நாத்தான் தீர்க்கதரிசியால் மறுபெயர் பெற்ற ராஜா யார்?

06. முதலாவது ஒரு பட்டணத்தைக் கட்டினவன் யார்? அதன் பெயரென்ன?

07. இடது கை ஆசீர்வாதம் பெற்றவன் யார்?

08. 'உம்முடைய வலது கரம் என்னைத் தாங்குகிறது' என்றது யார்?

09. எரிகோ பட்டணத்தை யுத்தம் பண்ணிப் பிடித்தவன் யார்?

10. வாலிபர் காளைகளை பலியிட்டதெப்போது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவர்கள் மேல் மனதுருகி சொஸ்தமாக்குகிறார்..

❒ திருமதி. J.பிலிப்




அன்பான சகோதரிகளே, அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிறார் என்ற தேவனுடைய வாக்குத்தத்தின்படி இவ் ஆண்டை நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

இக்கட்டு – வியாதி என்றும்,

இக்கட்டு – கடன்தொல்லை என்றும்,

இக்கட்டு – குடும்ப பிரச்சினை என்றும்,

இக்கட்டு – சமாதானம் அற்ற நிலை என்றும்

பலவிதமான இக்கட்டுக்களுக்குள் நாம் அகப்பட்டு இருக்கலாம். இவ் 'இக்கட்டுக்களை யார் நீக்குவார்' என்ற கேள்வியோடு இருக்கிறாயா? உன்மேல் மனதுருகும் தேவன் உனக்கு உண்டு. அவர் உன்னுடைய எல்லாவிதமான இக்கட்டுக்களில் இருந்தும் உன்னை விடுவிப்பார்.

வியாதி என்னும் இக்கட்டுடன் இருந்தவர்கள் மேல் இயேசு மனதுருகி அவர்களை விடுவித்தார் என்பதை மாற்கு 5:22-42வசனங்களில் காணமுடியும்.

யவீரு என்னும் ஒரு தலைவனுடைய மகள் மரண அவஸ்தைப்படுகிற போது தலைவன் தன் குமாரத்தி சொஸ்தமடையும்படி இயேசு தன் வீட்டிற்கு வந்து அவள் மேல் அவர் கைகளை வைத்தால் அவள் கட்டுக்கள் நீங்கி பிழைப்பாள் என்ற விசுவாசத்துடன் இயேசுவை மிகவும் வேண்டிக்கொண்டான். **இயேசு அவன் மேல் மனதுருகி அவனுடன் சென்றார்.**

இயேசு போகும்வழியில் பன்னிரண்டு வருடங்களாய் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும் சற்றும் குணமடையாமல் வருத்தப்படுகிற பொழுது இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் போகும் வழியில் தான் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டால் சுகமாவேன் என்ற விசுவாசத்துடன் ஜனக்கூட்டத்தின் மத்தியிலும் இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். இயேசு அவள் மேல் மனதுருகி **'உன் வேதனை நீங்கி சுகமாயிரு"** என்றார். அவளுடைய வியாதியின் கட்டுக்கள் அவளைவிட்டு நீங்கியது.


யவீருவின் வீட்டிலிருந்து சிலர் வந்து யவீருவைப் பார்த்து, உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள். இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகின்றீர் என்றார்கள். அவர்களுடைய வார்த்தைகளை கேட்ட இயேசு யவீருவைப் பார்த்து, பயப்படாதே! விசுவாசமுள்ளவனாயிரு என்றார். வீட்டிற்குள் இரைகிற ஜனங்களைப் பார்த்து, விலகுங்கள் சிறுபெண் மரிக்கவில்லை, அவள் நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக ஜனங்கள் இயேசுவைப் பார்த்து நகைத்தார்கள்.

நகைத்த ஜனங்களை இயேசு என்ன செய்தார் தெரியுமா, அவர் ஜனங்களை வெளியே துரத்தினார். **(மத்தேயு 9:24)** பின்பு அவர் உள்ளே பிரவேசித்து அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார். மரித்த சிறுபெண் உடனே எழுந்திருந்தாள். யவீரு இயேசுவைப் பார்த்து நீர் வந்து அவள் மேல் உம்முடைய கையை வையும், அப்பொழுது அவள் பிழைப்பாள் என்றான். அவன் விரும்பிய படி இயேசு அவள் மேல் மனதுருகினார். கைகளை வைத்தார். சிறுபெண்ணின் கட்டுக்கள் நீங்கி குணமடைந்தாள்.

அன்பான சகோதரியே இயேசு உன்மேல் மனதுருகி உன் கட்டுக்கள் நீங்கி நீ சுகமாய் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நீ செய்ய வேண்டியது பெரும்பாடுள்ள ஸ்திரீ போல இயேசுவுக்குப் பின் செல்ல வேண்டும். யார் தடை செய்தாலும் நீ இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தைவிட்டு விலகக்கூடாது. நீ இயேசுவின் பின்னால் சென்றால் இயேசு நிச்சயம் திரும்பி உன்னைப் பார்ப்பார்.


அவர் மேல் வைத்த விசுவாசத்தைவிட்டுவிடாதே. பெரும்பாடுள்ள ஸ்திரீயின் கட்டுக்கள் நீங்கியது போல தேவன் உன்மேல் மனதுருகுவார். உன் கட்டுக்கள் நீங்கி நீ சமாதானத்துடன் வாழ்வாய். அதுமட்டுமல்ல யவீரு அழைத்த படி இயேசு அவனுடைய வீட்டிற்குச் சென்றார். வீட்டில் இருந்து அகற்ற வேண்டிய காரியங்களை முதலில் அகற்றிய பின் யவீருவின் விருப்பப்படி அவன் மகள் மேல் மனதுருகினார், அவளைத் தொட்டார். அவள் சுகத்தைப் பெற்றுக் கொண்டாள். உன் வீட்டில் அகற்ற வேண்டிய காரியங்கள் என்ன என்பதை சற்று சிந்தித்துப் பார்த்து அவற்றை அகற்றிவிடு. அப்போது தேவன் உன்மேல் மனதுருகுவார். உன் கட்டுக்கள் நீங்கி நீ சுகமாய் வாழ்வாய்.

**மத்தேயு 14:14 இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகா பாவி!




ஜசிந்தா அக்கா

பாவம் செய்கிறது எல்லாருடைய சுபாவம் என்று சொல்லும் மக்கள் நிறைந்த பட்டணம் சொர்க்கபுரி. பெயர் தான் சொர்க்க புரியே தவிர அங்கு வாழும் மக்கள் செய்யும் அநியாயங்கள் செய்தித்தாள்களில் பக்கத்திற்குப் பக்கம் இடம் பெறும். அவ்வளவிற்கு அந்த ஜனங்கள் பொல்லாதவர்கள். ஒரு நாள் அவ்வூர் தபால் அலுவலகத்திற்கு ஒரு பார்சல் வந்தது. அந்தப் பார்சலில் பெற்றுக் கொள்பவர் பெயர் 'மகாபாவி' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை யாரிடத்தில் ஒப்படைப்பது என்ற பொறுப்பு தபாற்காரனாகிய அற்புதத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இதை நான் யாரிடத்தில் ஒப்படைப்பது என்று தபாற்காரனாகிய அற்புதம் மிகவும் கடுமையாய் யோசித்துக் கொண்டே இருந்தார். ஒரு ஞாபகம் வந்தது. சாரயக்கடையை நடத்திக் கொண்டிருப்பவரும் ஊரில் அமைதி என்பது மருந்துக்குக்கூட வந்துவிடக்கூடாது என்று நினைத்து அதற்கு என்ன செய்யலாமோ அத்தனையும் செய்து வருகிற மகா தேவனிடம் போனார். தான் வந்த நோக்கத்தை அவரிடம் கூறி தன்னிடம் இருந்த பார்சலை அவருக்குக் காண்பித்தார். அதிலிருந்த 'மகாபாவிக்கு' என்ற மேல் விலாசத்தைப் பார்த்ததும் மகாதேவன் கோப தேவனாக மாறிவிட்டார். அவர் பேசிய பேச்சுக்களை சகிக்க முடியாமல், தப்பினேன் பிழைத்தேன் என்று தலை தெறிக்க ஓடிவந்தார் தபாற்காரனான அற்புதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் இதை யாரிடத்தில் ஒப்படைக்கலாம் என சிந்தித்த போது அந்த ஊரின் நம்பர் வஃன் (One) கேடியான கோடீஸ்வரன் நினைவுக்கு வந்தார். அவரைக் கேடி என்று அழைப்பதினால் அவரது பெயர் யாருக்கும் தெரியாது. கடந்த முறை நடந்த தேர்தல் அவரைக் கோடீஸ்வரனாக மாற்றியுள்ளது. ஆகவே தபாற்காரனாகிய அற்புதம் அவரை சந்திக்க மிகவும் தென்புடன் தேடிச் சென்றார். அவருக்குப் பார்சலைப் பற்றிக் கூறி அதைக் காண்பித்தார். அவருக்கு வாசிக்கத்தெரியாது என்றதால் தபாற்காரனே வாசித்துக் காண்பித்தார். 'மகாபாவிக்கு' என்று வாசித்ததும் அவருக்கு கோபம் சீறிக்கொண்டு வந்தது. என்னிடத்தில் ஏதாவது லஞ்சமாக வாங்கினாலும் பறவாயில்லை. இந்த 'மகாபாவி' பட்டத்தை எல்லாம் வாங்கிக் கொள்ள முடியாது. நீ இந்த இடத்தை விட்டுப்போய்விடு என்றான்.

உயிர் பிழைத்தேன் சாமி என நினைத்துக்கொண்டே வந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து யாரிடம் கொடுக்கலாம் என மீண்டும் சிந்திக்கலானார். என்ன செய்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. திடீரென்று அவருக்குள் ஒரு உணர்வு வந்தது. உண்மையில் மகாபாவிகள் எல்லாம் தாங்கள் 'மகாபாவி' என்று ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. நானும் கூட ஒரு பாவி தானே எத்தனை தடைவ மற்றவர்களுக்குத் தெரியாமல் தவறு செய்துள்ளேன் என்று தபாற்காரன் அற்புதம் நினைத்தார். ஆகவே நானே அந்த 'மகாபாவி' என்று ஒத்துக் கொண்டு பார்சலைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கையெழுத்துப் போட்டுப் பார்சலை தன் வீட்டுக்கு எடுத்துக் சென்றான்.

அதினுள்ளே என்ன இருக்கிறது என்று அறிய மிகுந்த ஆவலுடன் பார்சலைப் பிரித்துப் பார்த்தான். உள்ளே விலை மதிக்க முடியாத தேவ வசனமாகிய அழகான வேதப்புத்தகம் அதற்குள் இருந்தது. அத்துடன் நீங்கள் உங்களை 'மகாபாவி' என்று ஒத்துக் கொண்டதால் இந்தப் பரிசு உங்களுக்கே என்ற ஒரு கடிதமும் இணைக்கப்பட்டிருந்தது. அதை அவன் ஆவலோடு வாசித்து இயேசுவைக் கண்டு கொண்டான்.

அன்பான பிள்ளைகளே நீங்களும் நான் ஒரு 'மகாபாவி' என்று ஒத்துக் கொள்வீர்களா? உங்களுக்கும் விலை மதிக்க முடியாத பரிசு இருக்கிறது 'அது தான் பரலோகம்!'.

**நீதிமொழிகள் 28:13 தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

---

அனல் 2022 தை - மாசி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**மாராள்**

(ரூத் 1:1-3,5,19-20)

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அருட்பணியாளர் சரிதை

## சார்லஸ் ஸ்பர்ஜன்
## 1834 - 1892



### வார்த்தைகள் வாழ்வாகட்டும்

அது ஒரு இருட்டான அறை. இங்கிலாந்து அரசு விதித்திருந்த ஜன்னல் வரி காரணமாக, அவ்வீட்டின் ஜன்னல்கள் அடைக் கப்பட்டிருந்தன. உள்ளே ஓர் சிறுவன். வீடு தான் இருள் நிறைந்து காணப்பட்டதே தவிர, அவன் உள்ளத்திலோ ஒளி வெள்ளமாகிய இயேசு நிறைந்திருந்தார். யார் அந்த சிறுவன்?

அவர் தான் 'பிரசங்கிகளின் இளவரசன்', 'மாபெரும் பிரசங்கி' என்றழைக்கப்படும் சார்லஸ் ஸ்பர்ஜன். சிறுவயதிலேயே வேத வசனங்களை மனப்பாடம் செய்யும் பழக்கம் உடையவர். ஓர் நாள் சுழல்காற்றில் அகப்பட்டச் சருகு போல பனிப்புயலில் மாட்டிக்கொண்டார். தப்பித்துப் பிழைக்க எண்ணிய அவர் அருகில் இருந்த ஆலயத்தில் தஞ்சம் புகுந்தார். அங்கே... ஏசாயா 45:22 ஆம் வசனத்தில் ஓர் அழகான பிரசங்கம். செய்தியளித்தவர் சார்லஸ் ஸ்பர்ஜனையே உற்றுப்பார்த்து 'தேவனை நோக்கிப்பார், அவர் உன்னை இரட்சிப்பார்' என்று எச்சரிப்போடு யதார்த்தத்தைக் கூறினார்.

சார்லஸ் ஸ்பர்ஜன் தன் நிலை உணர்ந்தார். இறைமைந்தன் இயேசுவிடம் சரணடைந்தார். அந்நேரமே அவர் உள்ளத்தில் மாபெரும் மாற்றம் பிறந்தது. உள்ளான மனிதனும் பிறந்தான். 17ஆவது வயதில் தெருக்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்த ஸ்பர்ஜன், 20ஆவது வயதில் புகழ்பெற்ற ஆலயத்தில் போதகரானார். 1854இல் 232பேர் கொண்ட அவர் சபை விரைவில் 5000இற்கும் மேற்பட்டோரை உருவாக்கியது. 1867ஆம் ஆண்டு ஆதரவற்றோர் இல்லத்தையும், பின்னர் பெண்களுக்கென ஓர் இல்லத்தையும் தோற்றுவித்தார். ஊழிய ஸ்தாபனத்தையும், வேதாகமக் கல்லூரியையும் ஆரம்பித்தார்.

மிகச்சிறந்த பிரசங்கியாரான இவர், 3560இற்கும் மேற்பட்ட பிரசங்கங்கள் செய்துள்ளார். அந்நாட்களில் இவர் பிரசங்கங்கள் உடனுக்குடன் பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

ஆண்டவரின் அழைப்பை அற்புதமாய் ஏற்று அரிய பிரசங்கங்கள் செய்த இவர், 1892ஆம் ஆண்டு ஜனவரி 31இல் விண்நகர் பயணமானார்.

**அன்பரே! உமது வார்த்தை பிறருக்கு பயனுள்ளதாக அமைகின்றதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** சுயசித்தம் நரகத்திற்கு அழைத்துச் செல்லுமேயொழிய ஒரு போதும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லாது. — சார்லஸ் ஸ்பர்ஜன்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 31**



# H.A.கிருஷ்ணபிள்ளை
## 1827 - 1900

## இதயம் திறந்தால் இயேசுவைக் காணலாம்

**வை**ணவ குடும்பம். சிறந்த தமிழ் பண்டிதரின் மகனாகப் பிறந்தார் கிருஷ்ணபிள்ளை. சிறுவயதிலேயே வைணவ நூல்கள் அனைத்தையும் மனப்பாடமாகக் கற்றுத் தேறினார். வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். கிருஷ்ணபிள்ளைக்கு தமிழ் மீது அதிக நாட்டம். இலக்கண சாஸ்திரங்கள் அனைத்தையும் எளிதாய் கற்று தமிழ் பண்டிதரானார்.

அச்சமயம், வேதாகமக் கல்லூரி ஒன்றிற்கு தமிழ் ஆசிரியர் தேவைப்பட்டதால் அங்கு தம் பணியை ஆரம்பித்தார். ஆனால் கிறிஸ்தவர்களிடம் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் 'க்ஸ்டபிள் என்ற மிஷனெரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணபிள்ளைக்கு கொடுக்கவே, வெறுப்படைந்த அவர் தன் வேலையையும் விட்டுவிட்டார். ஆனாலும் மிஷனெரியின் அன்பு அவரை சிந்திக்க வைத்தது.

அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் இதயத்தை திறந்து கொடுத்தனர். அவர்களில் தனக்கோடி ராஜீ என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணபிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பை தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்.

ஓர் இரவு. கிருஷ்ணபிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகள் உள்ளத்தில் நிறைய ஆரம்பித்தது. இதயம் மெல்லத் திறந்தது. கிறிஸ்துவை தன் உள்ளத்தில் வரவழைத்தார். அவர் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தமிழ் பண்டிதரான கிருஷ்ணபிள்ளை, கிறிஸ்துவைப் புகழ்ந்து பாடல்கள் எழுதவும், பாடவும் ஆரம்பித்தார். இரட்சண்ய யாத்ரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் அவர் மூலமாக வெளிவந்தவையே. மாபெரும் மிஷனெரிகளான சர்ஜெண்ட், உவாக்கர், ஏமிகார்மைக்கேல் மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக் கொடுத்த இவர், 1900ஆம் ஆண்டு பிப்ரவரி 03ஆம் திகதி என்றும் இறைவனை புகழ்ந்துபாட விண்ணகம் சென்றார்.

**அன்பரே! கிருஷ்ணபிள்ளையைப் போன்று இயேசுவை மட்டுமே பாடுகிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஆண்டவர் என் இருதயத்தை திறந்தார். அவரை துதிக்க என் வாயைத் திறந்தேன். H.A.கிருஷ்ணபிள்ளை**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 3**

## குறுக்கெழுத்துப் போட்டி - 105

### சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. ஆசகேல் – IIசாமு 2:18
05. நம்பிக்கை – நீதி 10:28
07. சாலொமோன் – Iஇராஜா 4:32
08. யாக்கோபு – ஆதி 32:30
09. அரோசேத் – நியா 4:2
11. அமத்சியா – IIஇராஜா 12:21

**வலமிருந்து இடமாக**

03. பெதஸ்தா – யோவான் 5:2
04. சிதேக்கியா – IIநாளா 18:23
06. ஆலோசனை – சங்கீதம் 33:11
10. பெயர்செபா – ஆதி 21:14
12. சம்மா – IIசாமு 23:11

**மேலிருந்து கீழாக**

01. ஆமோத்ஸ் – ஏசாயா 1:1
02. தபீத்தாள் – அப்போஸ் 9:36
03. பென்யமீன் – Iசாமு 9:21

**கீழிருந்து மேலாக**

10. பெத்தாபரா – யோவான் 1:28
11. அதோனியா – Iஇராஜா 2:15
12. சவுல் – Iசாமு 15:8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வேதநாயகம் மகாராஜா




## 01. சாட்சி வாழ்வு

**ஆதியாகமம் 4:1-4 (1.) ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்: அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். 2. பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்: ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். 3. சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். 4. ஆபேலும் தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்தையின் தலையீற்றுகளிலும் அவை களில் கொழுமையானவைகளிலும் சில வற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார்.** இங்கு காயீனையும் – ஆபேலையும் பெற்ற போது ஒரு வித்தியாசத்தைக் காண முடிகிறது. காயீனைப் பெற்ற போது 'கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்' என்று ஏவாளினால் கூறப்பட்டது. ஆனால் ஆபேலைக் குறித்து 'அவ்வாறு எதுவும் சொல்லப்படவில்லை.'

இவ் இருவரின் வாழ்வின் முடிவையும் பார்க்கின்ற போது கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்று சொல்லப்பட்டவன், புகழப்பட்டவன் விழுந்து போனான். ஆனால் ஒன்றுமே பேசப்படாதவன் தேவனுக்கு பிரியமாக, அவரால் அங்கீகரிக்கப்பட்டவனாக, தேவன் மகிமைப்படுகின்ற வாழ்க்கை வாழ்ந்தான். கிறிஸ்தவ வாழ்வில் மற்றவர்கள் புகழ்வதும், உயர்த்துவதும் ஒரு போதும் தேவனுடனான உறவில் தாக்கத்தை உண்டுபண்ணமுடியாது. படைப்பை பார்க்கின்ற போது ஏவாள் முதலாவது பெற்ற மனுக்குலத்தின் முதலாவது பிள்ளை காயீன். அவனைப் புகழ்ந்து சாட்சியோடு சொல்லப்பட்டி ருக்கின்றது.

ஆபேலைக் குறித்த சாட்சி தேவனாலே கொடுக்கப்பட்டது. அவனு டைய விசுவாச வாழ்வின் வெளிப்படாய்க் கொடுக்கப்பட்ட காணிக்கையை தேவன் அங்கீகரித்ததும், ஆபேலின் நன்மை யான வாழ்க்கை முறையும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சாட்சியாக சொல்லப்பட்டது. **எபிரெயர் 11:4 விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்.**

மனிதனால் வரும் சாட்சியின் உண்மைத் தன்மையைப் பார்க்கிலும் தேவனால் வரும் சாட்சி உண்மையா னது. மனிதனால் வரும் சாட்சியின் புகழ்ச்சியைப் பார்க்கிலும் தேவனால் வரும் சாட்சியின் புகழ்ச்சி மேன்மை யானது.

காயீன் தன்னைப் பற்றி சொல்லப்பட்ட 'கர்த்தரால் ஒரு மனுஷ னைப் பெற்றேன்' என்ற சாட்சியைக் காத்துக் கொள்ளத் தவறிவிட்டான். ஆனால் ஆபேல் கர்த்தரால் சாட்சி பெறத்தக்க வாழ்க்கை முறையை கடைப்பிடித்து வாழ்ந்தான். காயீன் பிறந்த போது 'கர்த்தர் கொடுத்த மகன்' என்று பெற்றோர் சொன்னது உண்மை. ஆனால் வளர்ந்து வந்த போது அவனுடைய வாழ்க்கைக்குள் தேவனுக் குப் பிரியமான சுபாவமும் வாழ்வும் சீரழிந்து காணப்பட்டது. ஆபேல் பிறந்த போது எதுவும் சாட்சியாகச் சொல்லப் படவில்லை. ஆனால் வளர்ந்து வரும் போது அவனுடைய வாழ்க்கைக்குள் தேவனுக்கு பிரியமான சுபாவமும் வாழ்வும் சிறப்பாய் வளர்ந்திருந்தது. காயீனுக்கு பிறந்த போது சாட்சி:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபேல் வளர்ந்தவனாக சாட்சி. ஆபேலின் முழுவாழ்வின் நிறைவும் தேவனால் புகழப்பட்ட சாட்சியானது. முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

எங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் அல்லது எங்களுடைய சிந்தனை சார்ந்த பகுதியில் கூட மற்றவர்கள் எங்களைப் போற்றி புகழ்ந்து சொல்கின்ற போது ஒரு சந்தோஷம் உண்டாகும். அதே போன்று மற்றவர்கள் எங்களை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்ற போது, அன்பு காட்டாமல் இருக்கின்ற போது, எங்களை வெறுக்கின்ற போது எமக்கு வேதனை இயல்பாகவே வரும். ஆனால் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், இப்படியான வேதனை துன்பங்கள் ஒரு போதும் கர்த்தருக்காக வாழ்கின்ற வாழ்க்கை முறையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. ஆபேல் புகழப்படவில்லை, தேவனுட னான அவனுடைய உறவு செம்மை யாக இருந்தது. நாங்கள் போற்றப்பட லாம் அல்லது தூற்றப்படலாம், ஏற்றுக் கொள்ளப்படலாம் அல்லது கைவிடப் படலாம்ஆனால்ஒன்றுசெய்யவேண்டும் 'தேவன் எதை விரும்புகின்றாரோ அப்படியான வாழ்வுக்கு எங்களை அர்ப்பணிக்க வேண்டும்'.

அனேகர் கிறிஸ்தவ வாழ்வில் சோர்ந்து போவதற்கு காரணம்: மற்றவர்கள் தங்களைப் புகழவில்லை, உற்சாகப்படுத்தவில்லை என்பதாகும். காயீனைப் பெற்ற போது சாட்சி சொல்லப்பட்டது அதே போல பல வேளைகளில் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளைக் குறித்து புகழ்வார்கள், புகழப்பட்ட, சாட்சி பெற்ற பிள்ளைகள் ஒரு போதும் தங்களை காயீனைப் போன்று விற்றுப் போடக்கூடாது.

ஒரு தாய் மிகவும் பயபக்தி உள்ளவர், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் மகனை வளர்த்து எடுத்தார், அவருக்கு மூன்று வயதாக இருக்கும் போது காலை நேரத்தில் தேனீர் அருந்த வேண்டும் என்றால் ஒரு வசனம் மனப்பாடம் செய்து சொல்ல வேண்டு மாம். நான் இங்கே கூற வருவது: இவ்வாறு சிறு வயதில் இருந்து வளர்த்து எடுக்கப்பட்டவர்கள் தங்களு டைய வயது முதிர்ந்த காலத்திலும் கர்த்தருக்காய் உறுதியாய் இருப்பவர் களும் உண்டு. சிறு வயதில் வாழ்கின்ற நாம் அல்லது எங்களுடைய பிள்ளை கள் தங்களுடைய முடிவை தேவன் வெறுக்கின்ற விதத்தில் அல்லது கேவலமாக முடிக்கக்கூடாது. அதனைக் காத்துக் கொள்வதற்காய் பிரயாசப்பட வேண்டும்.

ஆபேல் எப்படிப்பட்ட சிறப்பான மனிதன் அவனைக் குறித்து சாட்சி சொல்லப்படவில்லை. அவனுடைய வாழ்க்கையை பார்த்தால் அது தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய அருமையான வாழ்வு. உங்களுடைய எந்தவொரு வேதனையான வேளையிலும் ஆண்டவர் உங்களை ஏற்றுக் கொள்ளத்தக்க வாழ்க்கைக்காக உங்களை அர்ப்பணித் துக் கொள்ளுங்கள். உங்களுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை எந்த நிலையில் இருந்தாலும், இல்லாத நிந்தனைகளை சுமந்தாலும், வெறுக்கப்பட்ட நிலையில் நீங்கள் இருந்தாலும் சொல்லுங்கள்: ஆண்டவரே நீரே என்னுடைய ஏக்கம்! இயேசுவே உங்களுடைய வாழ்வின் நோக்கமாக எப்போதும் இருக்கட்டும்.

இரண்டு பேரிலும் ஆபேல் மற்றவர்களுடைய புகழ்ச்சி - இகழ்ச்சியைவிட்டு தன்னுடைய காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தான். **ஆதியாகமம் 4:2 பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்: ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்.** இங்கே ஆபேலைக் குறித்து கூறிய பிற்பாடு, உடனடியாக அவன் தன்னுடைய காரியத்தில் தேவனுக்கு எப்படி பிரியமாக வாழ வேண்டுமோ அவ்வாறு வாழ்ந்து காண்பித்தான். அவன் ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்ந்தான்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து பிதாவானவர் சொல்லி சாட்சி; **'மத்தேயு 3:17 இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்'** இயேசு கிறிஸ்து எப்போதும் பிதாவினிடமிருந்து சிறப்பான சாட்சி பெற்றுக் கொள்ளும் வாழ்க்கை வாழ்ந்தார். யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகனால் திருமுழுக்குப் பெற்று கரையேறும் போது தேவன் சொன்னார், 'இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமாய் இருக்கிறேன்' என சாட்சி சொன்னார். முதலாவதாக சாட்சி பெற்ற இயேசு இரண்டாவது தடவையம் பிதாவிடமிருந்து சாட்சி பெறுகிறார். **'மத்தேயு 17:5 இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாய் இருக்கிறேன்: இவருக்கு செவிகொடுங்கள்'** இயேசு எங்கும் தேவனுக்குப் பிரியமானவர். யோர்தானிலும் சாட்சி பெற்றார், மலையிலும் சாட்சி பெற்றார், பூமியிலும் பிதாவின் சாட்சிக்குரியவர், பரலோகத்திலும் பிதாவின் சாட்சிக்குரியவர். தாழ்விலும் சாட்சி வாழ்வு, மேன்மையிலும் சாட்சி வாழ்வு.

## 02. ஆராதனை வாழ்வு

**ஆதியாகமம் 4:3-4ª (3.) சிலநாள் சென்றபின்பு, காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். 4. ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான்.** இக்காரியம் ஆராதனைக்கு அடையாளமாக இருக்கின்றது. தேவன் பூரிப்படைகின்ற, அவரை மகிழ்விக்கின்ற மனநிலையோடு, விசுவாசத்தோடு நன்மை செய்தவனாய் கொண்டு வந்து கொடுத்த ஆராதனை தான் ஆபேலுடைய ஆராதனை. பெரிதாக கொடுத்தால் தான் தேவன் ஏற்றுக் கொள்வார், சிறிதாக கொடுத்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்ற மனநிலை எங்களுக்கு ஒரு போதும் இருக்கக்கூடாது. காயீனுடைய பலி ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றவுடனேயே அவனுடைய முகநாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டது. அப்போது நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ என்று ஆண்டவர் கேட்டார். பலி செலுத்துகின்றவர்கள் முதலாவது நன்மை செய்கின்றவர் களாய் இருக்க வேண்டும்.

நீங்கள் செலுத்துகின்ற காணிக் கையை தேவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றால் காணிக்கை செலுத்துவதற்கு முன் எங்களுடைய வாழ்வின் பகுதி, விசுவாசம், மனநிலை சரியானதாக இருக்க வேண்டும். நீ நன்மைசெய்தால்மேன்மை இல்லையா? என்று ஆண்டவரே சொல்லிவிட்டார். காயீனின் வாழ்விலே நன்மையின் பகுதி இல்லை. ஆகவே அவன் கொண்டு வந்து கொடுத்ததை கர்த்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. காணிக்கை கொடுப்பதற்கு முன் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வு, மற்றவர்களோடு உள்ள உறவு, தேவனோடு உள்ள ஜெபஉறவு இவையெல்லாம் சரியாக இல்லாமல் காணிக்கை கொடுப்போம் என்றால் காணிக்கை கொடுத்தோம் என்ற பெயர் இருக்கும் ஆனால் ஆண்டவர் ஏற்றுக் கொண்டாரா? இல்லையா என்பதுதான் வேதனை யான காரியம். மனநிறைவோடு தலையீற்றுக்களில் கொழுமையான வைகளை ஆபேல் காணிக்கையாகக் கொடுத்தான். அவனுடைய ஆராதனை யைப் பாருங்கள், எவ்வளவு தேவனை பிரியப்படுத்த முடியுமோ அவ்வளவு சிறப்பாக கர்த்தரை பிரியப்படுத்து கின்றான்.

உதாரணமாக உங்களிடம் 10ரூபா தான் இருக்கிறது அதுவும் கிழிந்த பணத்தாள் என்றால் அதை கொண்டு வந்து காணிக்கைப்பெட்டியில் போடலாம், பரவாயில்லை, ஆனால் பலவேளைகளில் நல்ல பணத்தாள் இருக்கும் போது பழைய, கிழிந்த தாள்களை காணிக்கை பெட்டிக்குள் போடுகின்றோம். இது எமது மனநிலை சரியில்லை என்பதனை காண்பிக் கின்றது. நாம் செய்கின்ற காரியங்கள் மூலம் எமது மனநிலை எப்படிப்பட்டது என்பது தெரியவரும். ஒரு இடத்தில் காணிக்கை பெட்டிக்குள் வட்டமாக வெட்டப்பட்ட வெற்றுத் தகடு ஒன்று போடப்பட்டிருந்தது. எல்லோரும் பார்க் கின்றார்கள் என்பதற்காக அதனை காணிக்கைப் பெட்டிக்குள் போட்விட்டுச் சென்றிருக்கிறார்கள். என்ன மனநிலை யோடு, என்ன எண்ணத்தோடு எங்கே கொண்டு வந்து காணிக்கை செலுத்து கின்றோம்? எங்களுடைய காணிக் கையை மனநிறைவோடு தேவன் ஏற்றுக் கொள்கின்ற காணிக்கையாக இருக்கட்டும். நாம் கர்த்தருக்கு கொடுப் பது ஒரு ஆராதனைக்கு அடையாளம். உங்களிடம் இல்லாவிட்டால் பிரச்சினை இல்லை, கர்த்தர் உங்கள் மேல் கோபப்படவேமாட்டார். உங்களுடைய மனநிலையை தான் ஆண்டவர் பார்க்கின்றார்.

தேவனுடைய இருதயத்தை அறிந்து ஆபேல் செயற்பட்டான். நான் கூறப்போவது, நான் சிந்தித்துப் பார்ப்பது என்னவென்றால்: ஆதாம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவாள் – காயீன் – ஆபேல் எல்லோரும் வீட்டில் இருந்து கதைக்கும் போது ஏவாள் கூறியிருப்பாள்: மகனே நான் பெரிதாக ஒரு பாவமும் செய்யவில்லை, அந்த பழத்தை சாப்பிடக்கூடாது என்று தான் சிந்தித்தேன், ஆனால் சர்ப்பம் என்னை வஞ்சித்தது, அதனால் நானும் சாப்பிட்டு, அப்பாவுக்கும் கொடுத்தேன். அதனால் ஆண்டவர் எங்களை ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியே துரத்தி விட்டார் என்று. அதற்கு காயீன் கேட்டிருப்பான்: இதற்காகவா ஆண்டவர் உங்களை துரத்தினார்? இதனால் ஒரு வேளை ஆண்டவர் மேல் அவனுக்கு வெறுப்பு உண்டாகியிருக்கும். ஆனால் ஆபேல் கேட்டிருப்பான்: ஆண்டவர் உங்களுக்கு ஏதாவது கட்டளை தந்திருந்தாரா? அதை நீங்கள் மீறினீர் களா? அப்படி நீங்கள் மீறியிருந்தால் அது தவறு தானே என்று. எம்முடைய குடும்பத்தில் நாம் பேசும் வார்த்தைகள் எல்லாம் எம்முடைய பிள்ளைகளுக்கு விசுவாசத்தை அல்லது அவிசுவா சத்தை உண்டாக்கக்கூடும் என்று நான் நினைக்கின்றேன்.

இந்த விடயத்தில் காயீனுக்கு ஆண்டவர் மீது கோபம் வந்திருக் கலாம். ஆபேலுக்கு தன்னுடைய பெற்றோர் தவறி விட்டார்கள் என்று தேவன் மீது அன்பு வந்திருக்கக்கூடும். ஒரே குடும்பம் – ஒரே பெற்றோர் ஆனால் இரண்டு பிள்ளைகளது மனநிலையும், விசுவாச வாழ்க்கையும், நன்மை தீமை செய்வதிலும் முற்றுமாய் நூறு வீதம் வேறுபட்டிருந்தது. தேவனு டைய இருதய ஏக்கத்தை புரிந்தவன் ஆபேல். தேவனுடைய சத்திய வசனத்தை, இருதயத்தை புரிந்து கொண்டால் ஒரு போதும் தேவன் ஏற்றுக் கொள்ளாத வாழ்க்கை வாழமாட்டீர்கள். ஒரு போதும் தேவனைக் குறித்த நோக்கத் தில் மாற்றம் வராதபடி ஆபேலைப் போன்று தேவனுடைய இருதயத்தை புரிந்தவர்களாய் வாழ்கின்ற போது நீங்கள் அவருக்கு பிரியமாய் வாழமுடி யும். எங்களுடைய வாழ்வைக் கொண்டு கர்த்தரை பிரியப்படுத்துவது தான் மெய்யான ஆராதனை. இதற்காக நீங்களும் நானும் எம்மை அர்ப் பணிக்க வேண்டும்.

## 03. ஆபேல் தேவனுடைய இருதயத்தை அறிந்த வாழ்வு

ஆதாம், ஏவாள் பாவம் செய்த போது ஆண்டவர் வாக்குத்தத்தம் கொடுத்தார்: அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்று... அதாவது மனித குலத்திற்காக அடிக்கப்பட வேண்டும், இயேசு கிறிஸ்து இரத்தம் சிந்த வேண்டும் என்பது தான் தேவனுடைய திட்டம். நான் நினைக் கின்றேன், அந்த திட்டத்தை ஆபேல் நன்றாக புரிந்து கொண்டான். அவனுக்கு ஆவிக்குரிய ஞானம் இருந்திருக் கின்றது. கிறிஸ்துவுக்கு முன் அடையாள மாக இரத்தம் சிந்தப்படுவதற்கு அடையாள மாக அவன் மந்தையைக் கொடுத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். ஆண்டவருக்கு வந்த கோபம் தணியத்தக்கதாக மந்தையைக் கொண்டு வந்து கொடுத்தான். உங்களு டைய சாட்சி வாழ்க்கை எப்படி இருக்கின் றது? உங்களைப் பற்றி சொல்லியிலும் சொல்லாமலும் இருந்த போது எப்படி வாழ்ந்தீர்கள்? உங்களுக்கும் கர்த்தருக் கும் இடையிலான உறவு எப்படியிருக்கி றது? நாம் எல்லோரும் தேவன் பக்கமாக திரும்ப வேண்டும். ஆபேலின் உண்மையான சுபாவம் எங்களுக்குள் வரவேண்டும். தெரிந்து கொள்ளப்பட்ட எங்களுடைய வாழ்வு தேவனுக்கு சுகந்த வாசனையாக அமைய வேண்டும்.

ஆபேலைக் குறித்த சாட்சி ஏவாளால் வரவில்லை, ஆனால் அவன் மரித்த போது தேவனால் சாட்சி சொல்லப்பட்டது. எங்களை உயர்த்து வதும், சாட்சி சொல்வதும் அது தேவனை பொறுத்தது. தேவன் எங்களைக் குறித்து சாட்சி சொல்ல வேண்டும் என்றால் பொறுமையாக கிறிஸ்தவ ஓட்டத்தை ஓட வேண்டும்.

*சில வருடங்களுக்கு முன்ப தாக ஒரு சகோதரன் பூமரக்கன்று ஒன்றை எங்களுக்குத் தந்தார். அதனை எங்களது வீட்டில் நாம் நட்டு வளர்த்தோம். அப்போது எங்களது வீட்டிற்கு முன் வீட்டில் இருக்கின்ற ஒரு அம்மா வந்து: நீங்கள் வளர்ப்பதற்கு மரம் இல்லாமல் காட்டுப்பூவரசம் மரத்தையா வளர்க்கின்றீர்கள் என்று கேட்டார். நாங்கள் அந்த மரத்தைக் குறித்து எவ்வளவு கூறியும் அவர் ஏற்றுக் கொள்ள வில்லை. அவர் எங்களை அலட்சியம் செய்துவிட்டு சென்றுவிட்டார். பிற்பாடு சில காலங்கள் சென்ற பின்பு அந்த மரம் வளர்ந்து பூக்கள் பூத்தன. அப்போது அந்த இடமே மிகவும் அழகாக இருந்தது. அப்போது அந்த அம்மா வந்து சொன்னார்: நான் தெரியாமல் சொல்லிவிட் டேன். இப்போது தான் அதன் அழகு தெரிகின்றது என்று.*

இதே போன்று உங்களைக் குறித்து யாரும் எதுவும் கூறலாம், ஆனால் நீங்கள் யார் என்பதனை வாழ்ந்து காட்டுங்கள். உங்களை குறித்து எதுவும் சொல்லலாம், மௌனமாய் இருங்கள். உங்கள் வாசம் வீசும் போது அவர்கள் பிரமித்து நாங்கள் தெரியாமல் சொல்லிவிட் டோம் என்று சொல்வார்கள். ஆகவே மிகவும் கவனமாக உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்! கிறிஸ்துவுக் காக நறுமணம் வீசுங்கள்! அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின் றது!!

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடை 107
## சரியான பதில்கள்

01. தாகோன் கோவில் - 1சாமுவேல் 5:1-5

02. யாக்கோபின் குமாரர், தாவீது - ஆதி 37:12-17, 1சாமு 16:11

03. தானியேல், நேபுகாத்நேச்சாரோடு - தானியேல் 4:27

04. அகியா - 1இராஜா 11:30

05. சகரியா தீர்க்கதரிசி - சகரியா 5:9

06. யோசியா - 11நாளாகமம் 35:7

07. இளையகுமாரன், கதரேனருடைய நாட்டினர் - லூக்கா 15:15, மாற்கு 5:9-14

08. சாமுவேல் தீர்க்கதரிசி - 1சாமுவேல் 7:9

09. யோசியா ராஜா - 11இராஜா 23:12-16

10. அஸ்தரோத் தேவனுடைய கோவில் - 1சாமுவேல் 31:9-10

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

'அடிமையாய், சிறைக்கைதியாய் இருந்த இருவர், உயிர் காக்கும் உதவிதனை செய்து தப்புவித்தனர் இருவரை; இவர்களால் உதவி பெற்றவர்கள் சகாயம் செய்ய மறக்க, மனம் வாடினர். அரசர்கள் இருவர் தேவனால் ஓர் இரவு நித்திரையிழக்க; மறுநாளே இவர்களுக்கு கிடைத்தது சிங்காசனமும் இராஜ பவனியும்.' சிறையிலிருந்து சிங்காசனம் சென்ற இந்த இருவர் யார்? யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவறான உபயோகம்

**வேதப்பகுதி: நியாயாதிபதிகள் 15:1-8**

பள்ளிக்கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்தனர் பாபுவும் சுரேஷும். பாபு சுரேஷிடம் ஒரு வீட்டைக் காட்டினான். இந்த வீட்டு மாடியில் உள்ள ஜன்னல் கண்ணாடியில் உன்னால் கல் வீச முடியுமா? என்றான் பாபு. இதோ வீசிக் காட்டுகிறேன் என்றான் சுரேஷ். ஒரு கல்லை எடுத்து ஜன்னலை நோக்கி எறிந்தான். ஜன்னல் கண்ணாடி உடைந்தது. 'பார்த்தாயா... என் சாதனையை' என்றான் சுரேஷ். அதற்குள் அந்த வீட்டு மனிதன் ஓடிவந்து சுரேஷை நன்றாக அடித்து உதைத்தான்.

நம்முடைய ஆற்றலையும், திறமையையும், பலத்தையும் நல்ல விஷயங்களுக்காக உபயோகிக்க வேண்டும். தவறான காரியங்களுக்காக உபயோகித்தால் சுரேஷைப் போல கஷ்டப்பட நேரிடும். சிம்சோன் தன்னுடைய ஆற்றலைத் தவறாக உபயோகித்தான். எனவே துன்பப் பட்டான். தாவீதைப் போல நல்ல நோக்கங் களுக்காக திறமையை உபயோகி.

**சிந்தனைக்கு:-**

**கர்த்தர் நமக்கு தந்துள்ள பலம், திறமை, அறிவு ஆகியவற்றை நல்ல விஷயங்களுக்காக பயன்படுத்த வேண்டும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' ...

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 300.00 |
| இந்தியா (India) | 650.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1100.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 700.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 900.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 900.00 |

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.............................................

முகவரி:..........................................

.....................................................

.....................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது வேதம் என்
மனமகிழ்ச்சியாயிராதிருந்தால்,
என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.
சங்கீதம் 119:92




To:

TO:
NOOLAGAM FOUNDATION
NO 55, SOMASUNDARAM AVE,
CHUNDIKULI,
JAFFNA

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org